செ.வெ.எண்: 61 நாள்: 22.11.2016

## பத்திரிக்கைச் செய்தி

## தேசிய இளைஞர் விழா - மாவட்ட அளவிலான தேர்வுகள் - 2016-17

12.01.2017 முதல் 16.01.2017 முடிய ஹரியானா மாநிலம் ரோர்டாக் நகரில் நடைபெறவுள்ள 21-வது தேசிய இளைஞர் விழாவில் கலந்து கொள்ளும் கலைஞர்களை தேர்வு செய்வதற்கான, புதுக்கோட்டை மாவட்ட அளவிலான தேர்வுகள் கீழ்க்கண்ட 18 பிரிவுகளில் 25.11.2016 அன்று காலை 8.00 மணி முதல் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

01. நாட்டுப்புற நடனம், 02. நாட்டுப்புறப்பாட்டு, 03.ஓரங்க நாடகம் (ஆங்கிலம் அல்லது ஹிந்தி), 04. கர்னாடக சங்கீதம், 05.ஹிந்துஸ்தானி சங்கீதம், 06. பேச்சுப் போட்டி, 07. ஹார்மோனியம், 08. மிருதங்கம், 09. புல்லாங்குழல், 10. வீணை, 11. சிதார், 12. கிடார், 13. தபேலா, 14. மணிப்புரி நடனம், 15. பரதநாட்டியம், 16.குச்சுப்புடி, 7.கதக், 18. ஒடிஸி நடனம்.

13 வயது முதல் 25 வயதிற்குட்பட்ட ஆடவர் மற்றும் மகளிர் மேற்காணும் மாவட்ட அளவிலான தேர்வுகளில் கலந்து கொள்ளலாம். மாவட்ட அளவிலான தேர்வுகளில் முதலிடம் பெறுபவர்கள் மாநில அளவிலான தேர்வுகளிலும், மாநில அளவிலான தேர்வுகளில் கலந்து கொண்டு தேர்வு செய்யப்படுபவர்கள் தேசிய இளைஞர் விழாவில் கலந்து கொள்ளவும் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

மேற்காணும் மாவட்ட அளவிலான தேர்வுகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது வயதுச் சான்றுடன் 25.11.2016 அன்று காலை 8.00 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்திற்கு வந்து தங்களது பெயரினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் , விளையாட்டரங்கம், புதுக்கோட்டை-1, தொலைபேசி எண்.04322-22218, அலைபேசி எண் - 7401703498 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**